## ஏழைகள் ஆதரவு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - கூறு “பீ”

### 1. அபிப்பிராயம்

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களின் விளைவுகளைத் தவிர,

(அ) 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைச் செயற்திட்டம் பேணியுள்ளதெனவும் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமைக் கூற்றினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட (யென்) கணக்கிலிருந்து பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டம் பேணியுள்ள ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவம் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறான மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியுள்ளன என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 3,093 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா. 32,975,032 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினங்களின் பொழிப்பினை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2010 | 2009 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | - | - | 932,857 |
| சம்பளங்கள் | - | 15,750 | 1,072,841 |
| பிரயாணம் | - | - | 23,932 |
| வழங்கல்களும் வேண்டுதல்களும் | - | - | 781,243 |
| பராமரிப்பு | - | - | 3,735,125 |
| ஒப்பந்தச் சேவை | - | - | 101,970 |
| ஆராய்ச்சிக் கற்கைகளும் அபிவிருத்திப் பயிற்சியும் | - | - | 24,909,287 |
| வங்கிக் கட்டணங்கள் | 2,592 | 1,857 | 44,625 |
| சேவைக் கட்டணங்கள் | 501 | - | 23,368 |
| ஏனையவைகள் | - | - | 1,349,784 |
| | 3,093 | 17,607 | 32,975,032 |

## 2.2 விசேட (யென்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான விசேட (யென்) கணக்கிற்கான செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றது.

| | ஜப்பான் யென் | ரூபா |
|---|---|---|
| 2010 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 24,406 | 30,295 |
| கூட்டு: | | |
| மீள் நிரப்பல்கள் | 396,600 | 500,826 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 41,910 |
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 421,006 | 573,031 |

## 2.3 பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்டமானது செயற்திட்டக் காலத்தின் போது நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 15 தொழில்சார் பயிற்சித் திட்டங்களின் ஊடாக 668 பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு பயிற்சியளிக்கவென திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் 621 அல்லது 93% வீதமான மாணவர்கள் மட்டுமே பயிற்சித் திட்டங்களை பூர்த்தி செய்திருந்தனர்.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2010 ஆம் ஆண்டின் போது பூர்த்தியடைந்திருந்த போதிலும் செயற்திட்ட பூர்த்தி அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் சொத்துக்களும் ஐசீரீஏடீ இற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.